


**30. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோர் மக்களுக்கு துர்கா பூஜை வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

2. முப்படைகளின் ஒருங்கிணைப்பு 21ஆம் நூற்றாண்டின் அத்தியாவசிய தேவையாகும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த 8 பேர் கொண்ட குழுவினர் கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்கின்றனர்.

4. ஆசிரியர் தகுதி தேர்வு விவகாரத்தில் தமிழக அரசு மறு ஆய்வு மனுவை தாக்கல் செய்துள்ளதாக மாநில அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

5. ஐ.சி.சி உலக கோப்பை, ஒரு நாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று குஹாட்டியில் இலங்கையை எதிர்கொள்கிறது.

***********

**வாழ்த்து**

நவராத்திரியின் 8ஆவது நாளான இன்று துர்கா பூஜை வெகு விமரிசையாக கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் தமது வாழ்த்து செய்தியில் நாட்டின் கலாச்சாரம், நம்பிக்கை ஆன்மீக பாரம்பரியத்தை இவ்விழா பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

பிரதமர் வெளியிட்ட செய்தியில் மக்கள் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி, அமைதி ஆரோக்கியமும் தளைக்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

நவராத்திரி விழாவின் முக்கிய நிகழ்வான சரஸ்வதி, ஆயுதபூஜை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் தமிழகம் விழாக்கோலத்துடன் களைகட்டியுள்ளது.

பண்டிகையை ஒட்டி ஈரோடு, மதுரை, உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் பூக்களின் விலை பரவலாக அதிகரித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை 3 மடங்கு உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், கல்வி துறை சீர்திருத்தங்கள் மூலம் இளையோருக்கு ஆளுமையுடன், அறிவுசார் மையமாக நம் தேசத்தை, மோடி அரசு முன்னெடுத்துச்செல்வது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் தரமான கல்வி, நவீன படைப்பாற்றல் திறன், வேலை வாய்ப்பு, தேவையான ஆதரவுடன் ஆற்றல்மிகு தொழில்முனைவோராக இளையோர், மேம்பட பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் இளைய சக்தியின் ஆளமைக்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பிரதமரின் நிபுன் பாரத் இயக்கம், ஸ்ரீதிட்டம், தேசிய கல்வி திட்ட உருவாக்கம் போன்றவற்றின் மூலம் சர்வதேச தரத்திற்கு மத்திய அரசு கல்வியை கொண்டு சென்றுள்ளது.

அளப்பரிய சீர்திருத்தங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விரிவாக்கம் மூலம் அனைவருக்கும் சிறப்பான கல்வியுடன் வளமான எதிர்காலத்தையும் மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

பள்ளி கல்வி மற்றும் உயர்கல்வியை தொழில்நுட்ப கல்வியாக மேம்படுத்தும் வகையில் பல்வேறு சீர்திருத்தங்களை உள்ளடக்கி 2020-ம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அரசு புதிய கல்வி கொள்கையை அறிவித்தது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் புதுதில்லியில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப, நாட்டின் கல்வி முறையை மத்திய அரசு நவீன படுத்தி வருவதாக எடுத்துரைத்தார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

அரசின் சீரிய முயற்சிகளால், கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்னர் 51 ஆயிரமாக இருந்த உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைகழகங்கள், கல்லூரிகள் மருத்துவமனைகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து கல்வியின் தரமும் உலகளாவிய நிலைக்கு உயர்ந்துள்ளது.

இதுகுறித்து திருச்சி தேசிய கலை அறிவியல் கல்லூரியை சேர்ந்த பேராசிரியர் டாக்டர் ராமசந்திரன்

----வாய்ஸ்----

மத்திய அரசின் முழுவீச்சிலான முனைப்பு நடவடிக்கைகளால் வலுவான வளர்ச்சி அடைந்த தேசத்தை உருவாக்கும் ஆற்றல் மிகு இளம் படையாக இளையோர் சக்தி அரிய சாதனைகளை படைத்து வருகிறது.

.. மியூசிக் ..

***********

**ராஜ்நாத்சிங்**

முப்படைகளின் ஒருங்கிணைப்பு 21ஆம் நூற்றாண்டில் இன்றியமையா தேவையாகும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் முப்படைகளின் கருத்தரங்கு நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், நாட்டிற்கு எதிரான சவால்கள் கடினமாகி வருவதால் இதற்கான அவசியம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் இந்திய விமான படையின் ஒருங்கிணைந்த வான் திறன் வெளிப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், முப்படைகளின் ஒருங்கிணைந்த செயலாக்கமே இதற்கு காரணம் என்றார்.

இதன்மூலம் தீர்க்கமான முடிவுகளை துல்லியமாக மேற்கொள்ள முடிந்ததாக திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

***********

**அனில் சவ்ஹான்**

உயிரி தொழில்நுட்ப தாக்குதல் மற்றும் அணு ஆயுத கதிர்வீச்சுகள் போன்ற சவால்களை எதிர்கொள்ள நாம் தயாராக இருப்பதன் அவசியத்தை முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சவ்ஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் ராணுவ செவிலியர் சேவையின் 100ஆவது நிறுவன தினத்தை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், கோவிட் பெருந்தொற்றுக்கு பிந்தைய காலத்தில் இந்த உயிரி தாக்குதல் அச்சுறுத்தல்கள் அதிகரிக்க கூடும் என்று எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அணுசக்தி கதிர்வீச்சு சவால்களை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளின் அவசியத்தையும் ஜென்ரல் அனில் சவ்ஹான் சுட்டிக்காட்டினார்.

***********

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் கட்டுமான பொருட்கள் மீதான வரி குறைந்து
ஏழை எளிய மக்களின் வீட்டு கனவு நனவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிமெண்ட், மார்பிள், கிராணைட் போன்ற பொருட்களின் வரி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் இதுசார்ந்த துறையில் வேலை வாய்ப்புகளுக்கும் வழி ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடியை சேர்ந்த பொறியாளர் இதுகுறித்து தெரிவிக்கையில்

**வாய்ஸ்**

***********

**தேசிய ஜனநாயக கூட்டணி குழு**

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக 3 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் விரிவாக விசாரணை நடத்திய பின்னர் இவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சமூகவலைதளத்தில் தவறான செய்திகளை பரப்பியமைக்காக கைது செய்யப்பட்டவரும் இதில் அடங்குவார்.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமா மாலினி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த குழுவினர் இச்சம்பவம் குறித்து ஆய்வு செய்வதற்காக கரூர் சென்ற போது அவர்கள் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானது.

இருப்பினும் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து பேச இருப்பதாகவும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவிக்க உள்ளதாகவும் இக்குழுவினர் தெரிவித்தனர்.

முன்னதாக கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் உறுப்பினரும் முன்னாள் மத்திய அமைச்சருமான திரு.அனுராக்சிங் தாக்கூர் 8 பேரை உள்ளடக்கிய இக்குழுவில் பல்வேறு கட்சி மற்றும் மாநிலங்களை சேர்ந்த உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

அடிதட்டு மக்கள் முதல் அனைத்து தரப்பினரையும் சந்தித்து இந்த சம்பவத்துக்கான காரணங்கள் குறித்த விவரங்களை சேகரித்து இதுதொடர்பான அறிக்கை பிஜேபி தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டாவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி குழு உறுதுணையாக இருக்கும் என்றும் திரு.அனுராக்சிங் குறிப்பிட்டார்.

***********

**அமைச்சர்கள்**

**சென்னை தியாகராய நகரில் 165 கோடி ரூபாய்** மதிப்பில் கட்டப்பட்ட இரும்பு பாலத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

**திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியை அடுத்த** பாடியநல்லூரில் 11 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று தொடங்கிவைத்தார்.

**மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர்** திரு.ஆர்.காந்தி காஞ்சிபுரத்தில் கோ ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு தள்ளுபடி சிறப்பு விற்பனையை இன்று தொடங்கிவைத்தார்.

இம்மாவட்டத்தில் ஒருகோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல்முறையாக உலக புத்தொழில் மாநாட்டை கோவையில் வரும் 9ம தேதி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் துவக்கிவைக்க உள்ளதாக, மாநில குறுசிறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் வாழ்வாதார தொழில்காப்பகத்தை இன்று தொடங்கிவைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாநாட்டில், 39 நாடுகளை சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்துகொள்ள உள்ளதாக கூறினார்.

***********

**அன்பில் மகேஷ்**

ஆசிரியர் தகுதி தேர்வு விவகாரத்தில் பள்ளி கல்வித்துறை சார்பில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணாக்கர் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

***********

**இருவரி**

**தமிழக மாற்றுத்திறனாளிகள் நல இயக்குனரகத்தில்** காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர், சிறப்பு கல்வியியலாளர், அலுவலக உதவியாளர் உள்ளிட்ட ஆயிரத்து 96 காலிப்பணியிடங்களுக்கு வரும் 14ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து** தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் போதிய அளவு யூரியா இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டையில் 8ஆது புத்தக திருவிழா** வரும் 3ஆம் தேதிமுதல் 12ஆம் தேதிவரை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**காந்தி ஜெயந்தியை ஒட்டி கள்ளக்குறிச்சி** சிவகங்கை பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நாளை மறுநாள் அனைத்து டாஸ்மாக் கடைகளும் மூடப்படும் என அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

***********

**கிரிக்கெட்**

ஐ.சி.சி உலக கோப்பை, ஒரு நாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

குஹாட்டியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**